# 14.05.2026 செய்திகள்

## தங்கம், வெள்ளி மீதான இறக்குமதி வரி 15%-ஆக அதிகரிப்பு

- தங்கம், வெள்ளி மீதான இறக்குமதி வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்துவதாக மத்திய அரசு புதன்கிழமை அறிவித்தது.
- இரு மடங்குக்கும் அதிகமான இந்த வரி உயர்வு உடனடியாக அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மேற்காசியாவில் நிலவி வரும் போர்ச்சூழலால் அதிகரித்து வரும் இறக்குமதி செலவினத்தைக் கட்டுப்படுத்தவும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்கவும் இந்த அதிரடி நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.
- ஏற்கெனவே, நாட்டு மக்கள் தங்கம் வாங்குவதை ஓராண்டுக்கு நிறுத்த வேண்டும் என்பது உள்பட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- தங்கம், எரிபொருள், சில வகை சமையல்எண்ணெய்யை இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்கிறது.
- போர்ச்சூழலில் இவற்றின் விலை கடுமையாக உயர்ந்து வருவதால் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பும் பாதிக்கப்படுகிறது.

» அதிகரிக்கும் இறக்குமதி:

- தங்கம், வெள்ளி மட்டுமல்லாது, பிளாட்டினம் மீதான இறக்குமதி வரி 6.4 சதவீதத்திலிருந்து 15.4 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- சுத்திகரிக்கப்படாத தங்கம், வெள்ளிக் கட்டிகள், நாணயங்கள், நகை உதிரிபாகங்கள் உள்ளிட்டவற்றுக்கும் இந்த வரி உயர்வு பொருந்தும் . 2025-26 நிதியாண்டில் தங்கம், வெள்ளி இறக்குமதி வருடாந்திர அடிப்படையில் 26.7 சதவீதம் உயர்ந்து 102.5 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது.
- நாட்டின் மொத்த இறக்குமதியில் இவற்றின் பங்கு 2024-25-ஆம் ஆண்டில் 11.8 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்ந்துள்ளது.

SURESH'